589
OFFICE OF THE REGISTRAR OF ...
30 JAN 1919
MADRAS
1643

"KALVI" MALA.

No. 5

THE VALUE OF FRIENDSHIP

(சுகிர்லாபம் அல்லது நட்பின் மேன்மை)

589
1·19

EDITED BY

Mrs. A. BESANT.

Translated by

N. R. Kethari Rao M.A., L.T.

(Fully Illustrated)

By

M. S. Sundara Sarma B.A.

THE KALVI PUBLISHING HOUSE,
MADURA.

1919. [Annas 2

Power Press, Madura.

QM
N19
128388

The Kalvi Publishing House Madura.

Editorial Board:—
R. S. Narayanaswami Aiyar Avl. B.A., B.L.,
M. S. Sundara Sarma Avl B.A., (Artist.)
R. Srinivasa Aiyar Avl. M.A., M. R. A. S.
M. Swaminatha Aiyar Avl. B.A., B.L.,
S. S. Surianarayana Sarma Avl. M A. B. Sc.
C. Narayanaswami Aiyar Avl. B A., L.T.,

"KALVI": a high class illustrated Tamil Monthly.
Annual Subscription Re. One only.
(2 As. stamps should be sent for specimen copy.)
Concession rates for all our publications to the subscribers of "Kalvi".

Post Box 44, Madura. — S. Nagarajan, Proprietor & Publisher.

Kalvi Specimen Volume [Illustrated] As. 6

OFFICE OF THE ...
30 JAN 1919

சுகிர் லாபம்

(அல்லது நட்பின் மேன்மை.)

முன்னொரு காலத்தில் கோதாவரி நதிக்கரையில் ஒரு அரசன் இருந்தான். அவனுக்குச் சோம பேறியான பிள்ளைகள் சிலருண்டு. அவர்களுக்குப் புத்திமதி சொல்ல, விஷ்ணுசர்மன் என்ற பெரியவர் சிலகதைகள் சொன்னார். அவைகளில் முதலாவது நட்பின் மேன்மையைப் பற்றியது.

புறாவும் சுண்டெலியும்.

காட்டில் ஒருநாள் பட்சிகளைப் பிடிப்பதற்காக வேடனொருவன் வலையை விரித்து அதன்மேல் தானியத்தைக் கொஞ்சம் வாரி இரைத்திருந்தான். அன்றுசாயங்காலம் புறாக்களெல்லாம் தமதரசனாகிய சித்திரக்கிரீவனோடு பறந்துகொண்டிருந்தன.

கீழேயிருக்கும் தானியத்தைக்கண்டு, "நமக்கு நேர்த்தியானதின்பண்டம் இருக்கிறதே நாம்தின்றுவிட்டுப்போகலாம்" என்று சில புறாக்கள் கூவின.

*

அதற்குச் சித்திரக்கிரீவன், "மனிதரே இல்லாத இக்காட்டில் தானியம் எப்படி வந்திருக்கும்? இதில் ஏதோ சூது இருந்தாலும் இருக்கும். நாம் எக்காரியத்தையும் யோசித்துச் செய்யவேண்டும், இல்லாவிடில் ஏதாவது அபாயம்நேரிடும்" என்றது.

புறாக்களோ இதின்பேச்சைக் காதுகொடுத்துக் கேட்கவில்லை. அவைகளுக்குப் பசியின் கொடுமை அதிகமாயிருந்ததால் ஆகாசத்திலிருந்து கீழேயிறங்கி உண்ண ஆரம்பித்தன.

சித்திரக்கிரீவனுக்கு இதில் இஷ்டம் இல்லாதிருந்தும் தன் பிரஜைகளுக்கு வரும் கஷ்டநிஷ்டூரத்தைத் தானும் அனுபவிக்கவேண்டும் என்று கருதி அவைகளுடன் தானும் சென்றது.

தான் நினைத்திருந்தபடியே ஆபத்தில் எல்லோரும் அகப்பட்டுக் கொண்டார்கள். அப்பொழுது தான், புறாக்கள் அரசன் வார்த்தையைக் கேட்காமலிருந்தோமே என்று வருத்தப்பட்டன.

ஆயினும் அரசன் கொஞ்சமும் கோபித்துக் கொள்ளாமல் அவைகளுக்கு எப்படி உதவிசெய்யலாம் என்றே யோசித்துக் கொண்டிருந்தது.

OFFICE OF T... 30 JAN 1919 MADRAS

‘சேர்ந்து வாழ்வதே சிறந்தவலிமை’ என்பதை மனதில் அறிந்து, “நீங்கள் இன்னமும் பயப்பட வேண்டாம். நான் ஒன்று கத்தும்போது நீங்கள் யாவரும் ஒருமிக்கப் பறந்துவிடுங்கள்” என்றது.

அப்படியே அவையெல்லாம் கூடிப் பறந்து வலையையும் தங்களுடன் தூக்கிக்கொண்டு போய் விட்டன.

வேடன் கையில் அகப்படாமலிருந்தும் வலையில் சிக்கியிருப்பது கஷ்டமாயிருந்ததால், சித்திரக்கிரீவன் அதனின்றும் விடுவிக்கத் தன் நண்பன் இரணியகன் வீட்டுக்குப்போகத் தீர்மானித்தது. அப்படியே எண்ணி, “கூரிய பற்களையுடையததாதலால் இவ்வலையை யறுப்பது இரணியகனுக்குச் சுலபமானது” என்று தன் பரிவாரத்தைப் பார்த்துக் கூறிற்று.

ஆகையால் அவர்கள் எல்லாரும் சேர்ந்து இரணியகன் இருப்பிடத்துக்குச் சென்றன. இரணியகனோ அவர்கள் வருவதால் உண்டாகும் பெருஞ்சத்தத்தைக் கேட்டுத் தன் வளையில் ஒளிந்திருந்தது சித்திரக்கிரீவன் தன் நண்பனைக் கூப்பிட்டு வலையின் கட்டுகளை யறுக்கும்படி கேட்க,

உடனே இரணியகன் சித்திரக்கிரீவனுக்குச் சமீபத்திலுள்ள கட்டுக்களைக் கடிக்க ஆரம்பித்தது அரசன் அதைப்பார்த்து "முதலில் என் பரிவாரத்தின் கஷ்டத்தை நிவர்த்திசெய்து அதற்குப்பின் தான் என்னை விடுவிக்கவேண்டும் என்றது. எலியோ, 'அது சரியன்று பிரஜைகளைவிட அரசன் பன் மடங்கு பெரியவனல்லவா?' என்றது. அதற்கு அரசன், "நானும் என் பிரஜைகளும் ஒன்றுதான், ஆபத்துக்காலத்தில் அவைகளுக்கு உதவிபுரிவதில் தயாராயிருப்பதே மேலோர்குணம். ஆதலின் அவைகளுக்கு உதவிபுரிந்த பின்பே என்னை நீ விடுவிக்க வேண்டும்" என்றது.

அப்போது சுண்டெலி அகமகிழ்ந்து, 'இது வன்றோ நல்லரசன்' என்று சொல்லி மெச்சியது. இரணியகன் உதவியால் விடுபட்ட புறாக்களும் சந்தோஷமடைந்து பறந்துபோயின.

ஆபத்தில் உதவி புரிபவனன்றோ நண்பன்?

விஷ்ணுசர்மன் அரசிளங்குமாரர்களைப்பார்த்துப் பின்னும் சொன்னார், "நன்னட்பின் மேன்மை இதினின்று நீங்கள் அறிகிலீரோ? நீங்கள் சோம்பேறியாயிருந்தால் யாவரும் பட்சமாயிருக்கமாட்டார்கள் வேண்டிய சமயத்தில் உதவிசெய்ய நண்பர்

ஒருவரும் இருக்கமாட்டார்கள். நமது அருமை நண்பர் வாக்கைக் கடக்கக்கூடாது. அவர்கள் சொல்வது சரியன்று என்றுதோன்றினாலும் நமது நன்மையையே நாடுவார். தவிரவும் நாம் பெரியவராஞல் மற்றவர்களுக்கு உதவிசெய்வதில் பெரியவராயிருக்கவேண்டுமே தவிர வேறல்ல. பிறர் நன்மையை நாடுபவரே மேலான குணத்தோர். இவ் விஷயத்தைப்பற்றி மற்றும் ஒரு கதை சொல்கிறேன்" என்ருர்.

மானும், காகமும், நரியும்.

ஒரு அரணியத்தில் ஒரு மானும் காகமும் பல நாளாய் சிநேகமாயிருந்தன. அங்கு மிங்கும் ஓடித்திரிந்து வயிருர இரைதேடி மான் கொழுத்திருந்தது. இதைப்பார்த்த நரியொன்று இக் கொழுத்த மானைக்கொன்று தின்ருல் எவ்வளவு நன்ருயிருக்கும் என்று நினைத்தது.

ஆயினும் மானைக்கொல்லும் சக்தி அதற்கு இல்லாததால் அது ஒரு உபாயம் செய்தது. தான் தனியாயிருப்பதாய்ப் பாசாங்கு செய்து தன் ஞேடு சிநேகம் செய்துகொள்ள வேண்டுமென்று மானை இரங்கிக்கேட்டது.

மானுக்கு இவ்வுபாயம் தெரியவில்லை. நரி மான் மாமிசத்தைத் தின்னும் மிருகமாதலால் இவைகளிரண்டுக்கும் சிநேகிதம் நிலை நிற்காது என்பதை மறந்து, மானும் மனமொத்து, நரியைத் தன் வீட்டுக்கு விருந்தாய் வரவழைத்தது.

காகமோ மானிடத்திலுள்ள பிரியத்தால் 'நரியோடு சிநேகம்செய்யவேண்டாம்' என்றுகூறிற்று.

இப்படியிருக்க, நரி மானைநோக்கி, "நீ என்னுடன் வா. செழிப்பான சோழக்கொல்லையொன்று அருகில் இருக்கிறது. அங்கே சென்று, நாம்வேண்டியவளவு புசிக்கலாம்" என்றது. ஆகவே மான் தினந்தோறும் அவ்விடம் சென்று சோழக்கொல்லையில் மேய்ந்து வந்தது.

வயலின் சொந்தக்காரனுக்கு இது தெரிந்தவுடனே அவன் ஒருபொறிசெய்து அதைப்பிடித்துவிட்டான். நரியின் மனது களித்தது, 'இன்றைக்கு நல்லுணவு அகப்படும்' என்று அது எதிர்பார்த்திருந்தது.

கொல்லைக்குச் சமீபத்தில் ஒளிந்திருந்து அது வேடிக்கையாய்ப் பரிகாசம் செய்தது. மான் உதவிக்குக் கூப்பிட்டபோது ஏதோ சாக்குப்போக்குச் சொல்லிச் சும்மாயிருந்து விட்டது.

காகமும், இதில் ஏதோ சூது இருக்கிறது என்று நினைத்து, மான் சுகமாயிருக்கிறதா என்று பார்க்க இவ்விடம் வந்தது. காகத்தைப்பார்த்த மான் அதன் வார்த்தையைக் கேளாமல் மதி கெட்டுப்போனேனே என்று வருந்திற்று.

தன் சிநேகிதனுன மான் கஷ்டப்படுவதைப் பார்த்து மனஞ்சகியாமல், காகம் 'நான் கா! கா! என்று கத்தினவுடனே நீ இறந்ததுபோல் பாசாங்கு பண்ணு சொந்தக்காரன் வலையை எடுத்து விடுவான், உடனே நீ வெகுவேகமாய் ஓடிப்போய்விடு என்று சொல்லிற்று.

காகம் சொன்னபடி கேட்டதால் மான் உயிர் தப்பி ஓடிப்போய் விட்டது. இதுவன்றோ நட்பின் கைம்மாறு!

நரி ஒளிந்திருந்ததை சொந்தக்காரன் பார்த்து விட்டதால் மானை அடிக்கவந்த தடியால் நரியைக் கொன்று போட்டான்.

விஷ்ணுசர்மன், இராஜகுமாரரைப் பார்த்து, 'புது சிநேகிதர்கள் எப்போதும் நம்பிக்கையுள்ளவர்களல்லோர். பழைய சிநேகிதர்கள் வார்த்தையை எப்போதும் உதாசீனம் செய்யக்கூடாது. உன்



நண்பனுக்கு இடையூறு வந்தகாலத்தில் அவ னுக்கு எப்படியும் உதவிசெய்தலே மேன்மை'' என்றார்.

லகுபடனன்

முற்காலத்தில் லகுபடனன் என்ற காக்கை இரணியகன் என்னும் எலியரசனோடுநட்புக்கொண் டாட விரும்பிற்று. அதற்கு இரணியகன், 'நீ ஒரே மாதிரியாயிருப்பவனல்லன். ஒரே இடத்திலுமிருப் பவனல்லன். உன்னுடன் சிநேகம் செய்வது கூடாது' என்றது. காக்கை,"நீ என்சிநேகிதனுகா விட்டால் நான் பட்டினியாயிருந்து இறப்பேன்." என்று சாதித்தது. ஆகவே அவையிரண்டும் சிநேக மாய்ச் சுகித்திருந்தன.

அவர்களிருந்த விடத்தில் ஆகாரம் அதிக மாய்க் கிடைக்கவில்லை. ஆகையால் காக்கை, "தண்டகாரணியத்திலிருக்கும் ஒரு அழகான தடா கத்திக்குச் செல்வோம். அங்கே ஆமையரசனுன மந்தரன் என் நண்பன். நமக்கு வேண்டிய ஆகாரம் அவன் அளிப்பான்" என்று சொல்லிற்று.

அப்படியே அவ்விரண்டும் மந்தரன் வீட்டுக் குச் சென்றன. சென்றதும், மந்தரன் எலியின் வர

QM N19

லாற்றைக் கேட்டான். அதற்கு இரணியகன் கூறியது:—"நான் எப்போதும் வீட்டில்தான் இருப்பது வழக்கம். வீட்டு எஜமானன் தூங்கிக் கொண்டிருக்கும்பொழுது இரவில் எனக்கு வேண்டியவைகளைத் தின்றுகளிப்பேன். எனக்கு ஒரு நாள் உணவே அகப்படாமற் போயிற்று. ஆதலால் களைத்துப்போயிருந்தேன். அது சமயம்பார்த்து என்னை நன்றாய் அடித்துத்துரத்திவிட்டான். அது முதல் வீட்டிலிருப்பதைவிடக் காட்டில் சஞ்சரிப்பதே மேன்மை என்று நினைத்து இங்கு வந்தேன்."

ஆகவே காகமும் ஆமையும் எலியும் மனமொத்து வாழ்ந்து வந்தன.

173388

இது நிற்க சித்திராங்கன் என்ற மான் ஒரு நாள் இவைகளிருக்குமிடத்துக்கு ஓடி வந்தது. அதைக்கண்டவுடனே ஆமை தண்ணீரிலும் எலி தன் வளையிலும் போய்ச்சேர்ந்தன. காகமோ அருகிலுள்ள மரக்கிளையில் உட்கார்ந்தது. ஆயினும் மான் ஒரு தீங்கும் விளைவிக்காது என்பது அறிந்து அவைகள் சற்றுநேரம் கழித்து வெளியே வந்தன.

இதைப்பார்த்த மான் இவைகளுடன் நட்புக் கொண்டாட விரும்பியது. "வேடர்கள் என்னைத்

துரத்திக்கொண்டு இவ்வழியே வருகிறார்கள். ஆதலின் வேறிடத்துக்குச் செல்லுவோம்" என்று அவையெல்லாம் நினைத்துப் புறப்பட்டன.

இதற்குள் வேடர் பின்பற்றி ஆமையைப் பிடித்துவிட்டார்கள். அதைப்பார்த்த மற்ற மிருகங்கள் ஆபத்துக்காலத்தில் கைவிடக்கூடாது என்று அறிந்து ஆமைக்கருகே சென்றன.

எலி, "சிநேகிதன், தாய், மனையாள், புத்திரன், சகோதரன் இவர்களினும் சிறந்தவனன்றோ? ஆதலின் அவனுக்கு உதவி புரிய ஒரு உபாயம் தேடவேண்டும். மானே! நீ தண்ணீரருகிற் சென்று இறந்ததுபோல் படுத்துக்கிட. காகம் உன்னைக கொத்துவதுபோல் பாசாங்கு செய்தால் வேடன் ஆமையை விட்டுவிட்டு உன்னை எடுக்கவருவான். அப்போது நான் ஆமையைக் கட்டியிருக்கும் கயிற்றைக் கடித்து விடுகிறேன்" என்று சொல்லிற்று.

அப்படியே மான் இறந்ததுபோற் பாசாங்கு செய்தது. காகம் அதைக்கொத்திற்று. வேடன்



மிக்க ஆனந்தமாய் மானைக்கைப்பற்றப் போனான். எலியும் கயிற்றைக் கடித்தது. ஆதலின் ஆமை தப்பிப்பிழைத்துத் தண்ணீரிற் புகுந்தது. மானும் வெகு சந்தோஷமாய்ப் பாய்ந்தோடியது. காகம் பறந்துபோயிற்று சுண்டெலி தன் வளைக்குச்சென்றது. வேடுவனோ மனவருத்தத்தோடு திரும்பினான்.

அன்று முதல் இந்நான்கும் சேர்ந்து வாழ்ந்து வந்தன.

விஷ்ணுசர்மனைப்பார்த்து அரசகுமாரர்கள், "கதைகள் வெகு நன்றாய் இருக்கின்றன" என்றார்கள். அதற்கு அவர் "நீங்களும் இப்படிப்பட்ட நல்ல சிநேகிதர்களையடைந்து சந்தோஷமாயிருக்க வேண்டும்." என்றார்.

178388

The South Indian Art Gallery.

BY

M. S. SUNDARA SARMA B. A.

WITH

Numerous half-tone blocks. (on Art Paper.)

(A clear exposition of the real artistic merit of the ancient hypostylic hall at Madura. Every lover of Indian Art will appreciate the originality and suggestiveness of the Artist author.)

INDIAN ARCHITECTURE

(TAMIL)

Fully Illustrated Re. 1

MIRA BAI.

(A TAMIL DRAMA)

BY

R. SRINIVASA AIYAR M. A. M. R. A. S.

(An ancient tale in clear dramatic style by the learned Professor fully illustrated by Mr. M. S. Sundara Sarma B. A.)

Kalvi Publishing House,
Madura.

Kalvi Mala (English) Each 2 As.

1. *The lion that spoke*:—by M. S. Sundara sarma B. A. (being a lion's testimony to the unique artistic value and glory of the ancient Indian Art.)

2. *Ganapathi*:—by M. S Sundara Sarma B. A. (An ancient myth and lore in easy English fully and beautifully illustrated by the author himself.)

(Tamil)

3. *Sivaji Maharaj*:—by R. S. Narayanaswami Aiyar B A., B.L., (True story of a Great Indian Patriot illustrated by our well known artist Mr. M. S. Sundara Sarma B. A)

4. *Kumanan*:—by R. S. Narayanaswami Aiyar B.A., B.L., (one of the best Tamil tales examplifying the triumph of virtue. Fully illustrated by Mr. M. S. Sundara Sarma B.A.)

5. *The value of friendship*:—
(S. P. N. E. Publication Edited by
Mrs. ANNIE BESANT.)

Translated by N. R. Kethari Rao M.A., L.T.,
and
fully illustrated by M. S. Sundara Sarma B.A.,

Kalvi Publishing House,
Post Box 44, Madura.